கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2010/2011 (ஓகஸ்ட்/செப்டம்பர் 2013)

LIBRA
02 OCT 2013
EASTERN UNIVERSITY, SRI LA

# ECOS 2204 Theory & Perspective Economics

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

---

01.(i) பேரின பொருளியல் சிந்தனையை வகைப்படுத்துக.
(07 புள்ளிகள்)

(ii) 'சே'யின் சந்தைவிதி தொடர்பான விமர்சனங்களை ஆராய்க.
(08 புள்ளிகள்)

(iii) மொத்தக் கேள்வி மொத்த நிரம்பல் மாதிரி தொடர்பாக கெயின்சிய வாதிகளுக்கும் நாணயவியலாளருக்குமிடையே காணப்படும் வேறுபாட்டினை ஆராய்க.
(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

02.(i) வட்டிவீத மாற்றமானது பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் விளைவுகளை ஆராய்க.
(06 புள்ளிகள்)

(ii) பின்வரும் தரவுகள் நான்கு துறைகளைக் கொண்ட ஒரு பொருளாதாரத்தில் கருதுகோள் அடிப்படையில் அமைந்தவை ஆகும்.

$I = 400 - 60Y$

$S = -80 + 0.5Yd$

$T = 0.8Y$

$G = 320$

$M = 0.1Y$

$X = 40$

(அ) மேற்கூறப்பட்ட தரவுகளிலிருந்து IS சமன்பாட்டினைக் கணிப்பிடுக.
(05 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் தரவுகள் பேரினப் பொருளாதார பணச்சந்தை தொடர்பானது (Ms=Md)

$Ms = 360$

$L_1 = 0.8Y$

$L_2 = 200 - 10Y$

மேலுள்ள தரவுகளிலிருந்து LM சமன்பாட்டினை உருவாக்குக.

(04 புள்ளிகள்)

(இ) நீர் பெற்றுக்கொண்ட IS,LM சமன்பாட்டிலிருந்து வட்டிவீதத்தினையும் வருமானத்தினையும் கணிப்பிட்டு வரைபடத்தினூடாக விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஈ) மேற் தரப்பட்ட தரவுகளிலிருந்து ஏனையவை மாறாத நிலையில் அரச வருமானமானது 440 ஆக அதிகரித்தால் புதிய வருமானத்தையும், வட்டிவீதத்தினையும் கணிப்பிடுக. இம்மாற்றத்தினை வரைபட ரீதியாகவும் விளக்குக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

03.(i) பேரினப் பொருளியல் சமநிலையினை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ii) "பேரினப் பொருளியல் கொள்கையினூடாக பேரினப் பொருளியல் இலக்குகள் அடையப்படுகின்றன." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(iii) "பொருளாதார உறுதிப்பாட்டினை ஏற்படுத்துவதில் நாணயக்கொள்கை முக்கிய பங்கினை வகிக்கின்றது." இக்கூற்றினை பணவியலாளர்கள், கெயின்சியவாதிகள் கருத்துக்களுக்கூடாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

04.(i) மண்டல் - பிளம்மிங் (Mundell - Fleming) மாதிரியில் உள்ள சிறப்பம்சங்களை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ii) மண்டல் - பிளமிங் மாதிரியின் அடிப்படையில் மூலதன அசைவினை சென்மதி நிலுவைக் (BOP) கோட்டினூடாக விளக்குக.

(08 புள்ளிகள்)

(iii) நிலையான நாணயமாற்று வீத மூலதன நகர்வுத் தொழிற்பாட்டில் பணக்கொள்கை, இறைக்கொள்கை என்பவற்றின் தாக்கத்தினை மண்டல் - பிளமிங் மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

05.(i) கெயின்சின் நுகர்வுத் தொழிற்பாட்டின் அடிப்படை விடயங்களை விளக்குக.
(10 புள்ளிகள்)

(ii) கெயின்சின் நுகர்வுத் தொழிற்பாட்டின் குறைபாடுகளை விமர்சன ரீதியாக ஆராய்க.
(10 புள்ளிகள்)

(iii) பொருளாதாரத்தில் முதலீட்டுப் பெருக்கியின் தாக்கத்தினை மதிப்பிடுக.
(05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றை வேறுபடுத்தி விளக்குக.

(i) சராசரி நுகர்வு நாட்டமும், சராசரி சேமிப்பு நாட்டமும்
(ii) தன்னிச்சையான முதலீடும், தூண்டப்பட்ட முதலீடும்
(iii) 'சென்மதி நிலுவை'யின் நடைமுறைக்கணக்கும், மூலதனக் கணக்கும்
(iv) பணச்சந்தை சமநிலையும், பொருட்சந்தை சமநிலையும்
(v) நிலையியல் பொருளியலும், இயங்கியல் பொருளியலும்

(5x5=25 புள்ளிகள்)